


**08. 07. 2026**

## தலைப்புச் செய்திகள்

**1.** பிரதமர் திரு. நரேந்திரமோடி தமது மூன்று நாடுகள் பயணத்தின் இரண்டாவது கட்டமாக இன்று மெல்பர்ன் செல்கிறார்.

**2.** சமூக நீதித்துறை சார்ந்த திட்டங்கள் குறித்து முதலமைச்சர் திரு. விஜய் இன்று சென்னையில் ஆலோசனை மேற்கொண்டார்.

**3.** தமிழகத்தில் 6 தனியார் மருத்துவ கல்லூரிகள் நிகர்நிலை பல்கலைகழகங்களாக அறிவிக்கப்பட்டதற்கு எதிராக அரசு நீதிமன்றம் செல்லும் என்று அமைச்சர் திரு. அருண் ராஜ் கூறியுள்ளார்.

**4.** திருச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறையின் பணிகளை இத்துறைக்கான மாநில அமைச்சர் திரு. என். ஆனந்த் இன்று பிற்பகல் ஆய்வு செய்கிறார்.

**5.** நீர்பிடிப்பு பகுதிகளில் மழை காரணமாக பவானி சாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

## இனி விரிவான செய்திகள்

************

## பிரதமர்

பிரதமர் திரு.நரேந்திமோடி தமது மூன்று நாடுகள் பயணத்தின் இரண்டாவது கட்டமாக இன்று ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகருக்கு செல்கிறார்.

இந்தியா – ஆஸ்திரேலியா வருடாந்திர உச்சிமாநாட்டில் பங்கேற்கும் பிரதமர் இருநாடுகளின் தலைமை செயல் அதிகாரிகள் கூட்டத்திலும் கலந்துகொள்கிறார்.

ஆஸ்திரரேலிய பிரதமர் ஆண்டனி ஆல்பனீசுடன் பல்வேறு துறைகளில் ஒத்துழைப்பு தொடர்பான இருதரப்பு பேச்சுவார்த்தைகளை பிரதமர் மேற்கொள்கிறார்.

முன்னதாக இந்தோனேசியாவின் பாரம்பரிய கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த பிராம்பணன் திருக்கோவிலை பார்வையிட்டு பிரதமர் வழிபாடுகளை மேற்கொண்டார்.

பல்வேறு புனித தலங்களில் சிவபெருமானுடன் இணைப்பிற்கான தொடர் வாய்ப்புகள் தமக்கு கிடைத்து வருவதாக பிரதமர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

************

## முதலமைச்சர் - சமூகநீதி

தமிழ்நாட்டில் பட்ஜெட்டிற்கு முந்தைய ஆலோசனைகளின் ஒருபகுதியாக சமூக நீதி துறை திட்டங்கள் குறித்து முதலமைச்சர் திரு.விஜய் இன்று ஆலோசனை மேற்கொண்டார்.

சென்னை தலைமை செயலகத்தில் நடைபெற்ற இத்துறை செயல்பாடுகள் குறித்த ஆலோசனைக்கூட்டத்தில்

நடப்பு நல திட்டங்களின் முன்னேற்றம்,

மாணாக்கருக்கான கல்வி உதவிதொகை ,

மாணவர் விடுதிகள் மேம்பாடு குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

ஆதி திராவிடர் பழங்குடியின மக்களின் கணக்கெடுப்பு தொடர்பாகவும் இதில் ஆலோசனைகள் மேற்கொள்ளப்பட்டன.

வரவிருக்கும் பட்ஜெட்டில் அறிவிக்கப்பட உள்ள துறை சார்ந்த திட்டங்களுக்கு கூடுதல் நிதி ஒதுக்கீடு குறித்தும் இதில் ஆராயப்பட்டது.

மாநில சமூக நீதித்துறை அமைச்சர் திரு. வன்னியரசு அத்துறையின் உயர் அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

************

முதலமைச்சர் – ஊரக வளர்ச்சி

ஊரக வளர்ச்சித்துறையின் நல திட்டங்கள் மக்களை உரிய முறையில் சென்று சேர வேண்டும் என்று முதலமைச்சர் திரு.விஜய் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இத்துறையின் ஆலோசனை கூட்டத்தில் தகுதியான பயனாளிகளுக்கு நல திட்டங்கள் கிடைப்பது உறுதி செய்யப்பட வேண்டும் என்றும் அவர் அறிவுறுத்தினார்.

ஊரக குடியிருப்பு திட்டம் முதல்வரின் வீடு கட்டும் திட்டம் போன்ற திட்டங்கள் மக்களை சென்று சேர நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

************

ராஜ்மோகன்

தமிழகத்தில் கடந்த 50 ஆண்டுகளாக சீர்குலைந்துள்ள சட்டம் ஒழுங்கு நிலமை சரிசெய்யப்படும் என்று மாநில பள்ளி கல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் அமெரிக்காவில் தமிழர்களின் ஆண்டுவிழாவில் பங்கேற்று உலக தமிழர்களை இணைக்க கூடிய பணிகளை தொடங்கியிருப்பதாக கூறினார்.

மூன்றாம் வகுப்பு வரை பாட புத்தகங்கள் மாற்றப்பட்டுள்ளதாகவும், அடுத்தடுத்த வகுப்புகளுக்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் கூறினார்.

************

<u>அருண் ராஜ்</u>

தமிழ்நாட்டில் 6 தனியார் மருத்துவ கல்லூரிகள் நிகர்நிலை பல்கலைகழகங்களாக அறிவிக்கப்பட்டதற்கு எதிராக மாநில அரசு நீதிமன்றம் செல்லும் என்று மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. அருண் ராஜ் தெரிவித்துள்ளார்.

சென்னையில இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், இம்மருத்துவ கல்லூரிகள் நிகர்நிலை பல்கலைகழக அந்தஸ்து பெற அப்போதைய தமிழக அரசிடம் தடையில்லா சான்றிதழ் கோரி விண்ணப்பித்ததாக குறிப்பிட்டார்.

ஆனால் அப்போதைய திமுக அரசு 60 நாட்கள் வரை தடையில்லா சான்றிதழ் வழங்காததால், தனியார் கல்லூரிகள் உயர்நீதிமன்றத்தை நாடி அனுமதி பெற்றதாகவும் அவர் கூறினார்.

தனியார் மருத்துவ கல்லூரிகள் நிகர்நிலை அந்தஸ்து பெற்றால் அவை, ஏழரை சதவிகித உள் ஒதுக்கீடு உட்பட மாநில அரசின் இடஒதுக்கீடு முறைகளை பின்பற்ற தேவையில்லை என்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

நிகர்நிலை பல்கலைகழகங்கள் தமிழ்நாடு அரசு நிர்ணயிக்கும் கட்டணத்தை வசூலிப்பதற்கான கட்டாயம் இல்லை என்றும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

முன்னதாக ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனையில் நலம் A I வாட்ஸ் அப் சேவையை அமைச்சர் இன்று தொடங்கிவைத்தார்.

வாய்ஸ்

************

## கேரளம்

கேரள மாநிலம் கொச்சியில் பிரிக்ஸ் நாடுகளின் பெண் அமைச்சர்களின் கூட்டம் இன்று தொடங்கியது.

மத்திய மகளிர் குழந்தைகள் மேம்பாட்டுத்துறை அமைச்சர் திருமதி அன்பூர்ணா தேவி உள்ளிட்டோர் இதில் பங்கேற்றுள்ளனர்.

இந்த கூட்டத்தின் இறுதியில் கூட்டறிக்கை வெளியிடப்படுகிறது.

தொடர்ந்து பிரிக்ஸ் உச்சிமாநாட்டின் ஒருபகுதியாக பிரிக்ஸ் உச்சி மாநாட்டு கண்காட்சியும் இடம்பெறுகிறது.

ஊரக மேம்பாடு, அறிவியல், தொழில்நுட்பம், பொறியியல், கணிதம், ஊட்டசத்து, கல்வி பிரிவுகளில் இந்திய மகளிரின் சாதனைகள் குறித்த அரங்குகள் இடம்பெற்றுள்ளன.

************

## ஆனந்த்

திருச்சி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை தொடர்பான பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆய்வுக்கூட்டம் இன்று பிற்பகல் இத்துறையின் மாநில அமைச்சர் திரு.என்.ஆனந்த் தலைமையில் நடைபெறுகிறது.

முன்னதாக பெரம்பலூரில் நடைபெற்ற கூட்டத்தில் துறை சார்ந்த முன்னெடுப்புகள் குறித்து விரிவாக ஆலோசனை மேற்கொண்டார்..

************

## அஇஅதிமுக

அஇஅதிமுக மீண்டும் புத்துணவுடன் ஆட்சியில் அமரும் என்று கட்சியின் பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி தெரிவித்துள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் திருச்சி மாவட்ட அஇஅதிமுக நிர்வாகிகளுடன் இன்று ஆலோசனை

மேற்கொண்ட அவர், அனைவரும் ஒற்றுமையாக செயல்பட்டு உள்ளாட்சி தேர்தலில் கட்சிக்கு வெற்றியை பெற்று தருமாறு கேட்டுக்கொண்டார்.

************

அன்புமணி

தமிழக பல்கலைகழகங்களின் துணை வேந்தர்களை நியமனம் செய்வதற்கான தேடல் குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் என்ற அறிவிப்பு நியமன முறையை மேலும் சிக்கலாக்கும் என்று பா.ம.க தலைவர் டாக்டர் அன்புமணி கூறியுள்ளார்.

பல்கலைகழக தேடல் குழு தொடர்பாக ஒவ்வொரு பல்கலைகழகத்திற்கும் தனித்தனி சட்டங்கள் உள்ளதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

************

இருவரி

கடலூர் மாநகராட்சிக்குட்பட்ட குண்டு சாலை பகுதியில் காலைஉணவு திட்ட செயல்பாடுகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிபி ஆதித்ய செந்தில்குமார் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

வரக்கால்பட்டு பகுதியில் தூய்மை பணிகளையும் அவர் பார்வையிட்டர்.

மயிலாடுதுறை மாவட்டத்தில் சிறந்த எழுத்தாளர்களுக்கான பரிசு தொகை பெற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் அடுத்த மாதம் 25ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்குமாறு ஆட்சித்தலைவர் திரு.ஸ்ரீகாந்த் கூறியுள்ளார்..

அரியலூர் ஜெயங்கொண்டம் தா.பழூர் அரசு தொழில்பயிற்சி நிலையங்களில் பயிற்சியாளர் நேரடி சேர்க்கைக்கான கால அவகாசம் வரும் 31ஆம் தேதிவரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திருமதி மிருணாளினி தெரிவித்துள்ளார்.

மதுரை மேலூர் ஊராட்சி ஒன்றியம் விநாயகபுரம் கிராமத்தில் மின்னணு பயிர் கணக்கெடுப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.நிஷாந்த் கிருஷ்ணா இன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நாகையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை மேம்பாட்டு திட்ட பணிகள் குறித்து ஆட்சித்தலைவர் திரு.பிரவீன் குமார் தலைமையில் இன்று ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

அந்தந்த கிராம ஊராட்சிகளின் சாலை குடிநீர் தொடர்பான பணிகள் குறித்து வட்டார வளர்ச்சி அலுவலர்களுடன் விரிவான ஆலோசனைகளை மேற்கொண்டார்.

கிராம பகுதிகளின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அலுவலர்களுக்கு அவர் அறிவுறுத்தினார்.

திருச்சி மண்டல கலை பண்பாட்டு துறை சார்பான போட்டிகள் வரும் 11ஆம் தேதி பெரம்பலூர் மாவட்ட அரசு இசை பள்ளி வளாகத்தில் நடைபெற உள்ளதால் இந்த வாய்ப்பை தகுதியுடையவர்கள் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் சரண்யா அறி கூறியுள்ளார்.

************

<u>தர்மபுரி</u>

தர்மபுரி மாவட்டத்தில் மக்களின் கோரிக்கைகள் உடனுக்குடன் நிறைவேற்ற உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று ஆட்சித்தலைவர் திரு. வே. சரவணன் கூறியுள்ளார்.

இருமத்தூரில் இன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட முகாமில் அரசின் நல திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி அவர் உரையாற்றினார்.

வாய்ஸ்

************

தூத்துக்குடி

தூத்துக்குடி மாவட்டத்தில் நடமாடும் உழவர் சந்தை இ - ஆட்டோ திட்டம் இன்று தொடங்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

************

பவானி

ஈரோடு மாவட்டம் பவானி சாகர் அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில் தென்மேற்கு பருவமழை காரணமாக அணைக்கு நீர்வரத்து 5 ஆயிரத்து 516 கன அடியாக இன்று அதிகரித்துள்ளது.

105 அடி கொள்ளளவு கொண்ட இந்த அணையின் நீர்மட்டம் இன்று 55.56 அடியாக உள்ளது.

பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக பவானி ஆற்றில் 750 கன அடி தண்ணீரும்,

கீழ்பவானி வாய்க்காலில் 5 கன அடி தண்ணீரும் வெளியேற்றப்படுகிறது.

************

வானிலை

காற்றழுத்த தாழ்வுப்பாதை காரணமாக நீலகிரி மாவட்டத்தில் இன்றும் நாளையும் பலத்த காற்றுடன் கூடிய கனமழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் பலத்த காற்றுடன் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளதாகவும் இம்மையம் கூறியுள்ளது.

************

<u>கால்பந்து</u>

FIFA உலக கோப்பை கால்பந்து போட்டியில் சுவிட்சர்லாந்து காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

வான்கோவரில் நடைபெற்ற காலிறுதிக்கு முந்தைய சுற்றில் சுவிட்சாலாந்து - கொலம்பியாவை பெனாலிட்டி ஷூட் முறையில் 4-3 என்ற கோல் கணக்கில் வென்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

************